**செய்தி வெளியீடு எண் : 180** **நாள்: 26.01.2022**

## சென்னை பெருநகரப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் பராமரிக்கப்படும் சாலை பணிகள் தரத்தினை மாண்புமிகு பொதுப்பணி, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் நள்ளிரவில் திடீர் ஆய்வு

*****************

சென்னை மாநகராட்சி பகுதியில் 258 கி.மீட்டர் சாலை நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படுகிறது. அதில் ஜி.எஸ்.டி சாலையில் கிண்டி ரயில்வே மேம்பாலம் அருகில் அணுகு சாலை செப்பணிடும் பணிகள் ரூ.171.00 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி சாலைகளை மில்லிங் செய்து குடியிருப்பு பகுதிகளில் சாலையின் உயரம் அதிகரிக்காமல் பணிகள் சரிவர நடைபெறுகிறதா என்பது குறித்தும், சாலைப் பணிகள் தரத்துடன் போடப்படுகின்றனவா என்பது குறித்தும் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் 25.1.2022 அன்று இரவு 11.30 மணியளவில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, சாலை 40 மி.மீட்டர் அளவுக்கு தோண்டப்பட்டு (மில்லிங்) உள்ளதா எனவும், புதியதாக போடப்படும் சாலையின் உயரம் 40 மி.மீட்டர் அளவுக்கு கணத்துடன் போடப்பட்டடள்ளதா எனவும், அளவீடு கருவிகளை கொண்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், போடப்பட்டுள்ள சாலையினை துளையிட்டு மதிப்பீட்டில் உள்ளபடி அடர்த்தி, அடர்நிலக்கில் (தார்) மற்றும் உறுதி தன்மை உள்ளதா என பரிசோதித்தார்.

இந்த ஆய்வின் போது தலைமைப் பொறியாளர் திரு.சந்திரசேகர், கண்காணிப்பு பொறியாளர் திரு.செந்தில் மற்றும் கோட்டப் பொறியாளர் திரு.சரவணச்செல்வன், தரக்கட்டுபாடு கோட்ட பொறியாளர் திரு.சிற்றரசு மற்றும் நெடுஞ்சாலைத் துறை பொறியாளர்கள் மற்றும் பணியாளர்கள் உடனிருந்தனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**